[1986 மே 6

மதுரை ரேஸ் கோர்ஸ் மைதானத்தில் காலரிகள் கட்டுதல்.

*676—(*வினா எண் 3930)* திரு. மு. மாரிமுத்து: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை ரேஸ் கோர்ஸ் மைதானத்தில் எல்லாப் பகுதிகளிலும் காலரி கட்டி முடிக்கும் திட்டம் அரசின் கவனத்தில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், திட்ட மதிப்பீடு எவ்வளவு ?

(இ) எப்பொழுது வேலை தொடங்கப்படும் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ): இக்கேள்விகளுக்கு இடமில்லை.

திரு. மு. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மதுரையில் இருக்கக்கூடிய ரேஸ் கோர்ஸ் மைதானத்தில் பாதி அளவுக்கு காலரிகள் கட்டப்பட்டு மீதிப் பகுதிகளில் கட்டப்படாமல் இருக்கின்றன. அந்த ரேஸ் கோர்ஸ் மைதானத்தில் மாவட்ட விளையாட்டு மையம் இயங்கிக் கொண்டிருக்கிறது. சுமார் 7 லட்சம் மக்கள் தொகை கொண்ட மதுரை மாநகர் தமிழகத்தினுடைய 2-வது பெரிய நகரமாக விளங்குகின்ற நிலையில் முழுமையான காலரி வசதி கொண்ட ஒரு விளையாட்டு அரங்கம் இல்லாதது ஒரு பெரும் குறையாக இருக்கிறது. எனவே இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டு வருகின்ற நிதி ஆண்டிலாவது அந்தத் திட்டத்தை அரசு மேற்கொள்ளுவதற்குரிய செயற்குறிப்பை கவனத்தில் எடுத்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையிலே இருக்கின்ற அந்த விளையாட்டுத் திடலில் காலரி அமைக்கப்படாமல் இருப்பதற்கான காரணம், அந்தச் சங்கத்தைச் சார்ந்தவர்கள் 10 லட்சம் ரூபாய் கடனுடன் மதுரை மாவட்ட விளையாட்டு மையத்திற்கு அந்த திடலை வழங்கியிருக்கிறார்கள். அதாவது மதுரை மாவட்ட கால்பந்து சங்கம் ரூ. 10 லட்சம் கடனுடன் அந்தத் திடலை வாங்கியிருக்கிறார்கள். மேலும் 7½ லட்சம் ரூபாய திருப்பிச் செலுத்தப்பட

1986 மே 6]

வேண்டியிருக்கிறது. இப்போதுள்ள அந்த நிலையில் இதற்காக மாவட்ட விளையாட்டு மன்றத்தில் தீர்மானம் எதுவும் நிறை வேற்றப்படவில்லை. காலரிகள் கட்டுவதற்கு மதிப்பீடுகள் தயா ரிக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவில்லை. அந்த நிலையில் அந்த திடல் பற்றிய நிலைமைகள் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே இப்போது காலரி கட்டுகின்ற எந்தத் திட்டமும் இல்லை.

திரு. மு. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எதிர்காலத்திலாவது தேவையைக் கருதி, அந்தப் பெரிய நகரத்திற்கு அவ்வளவு அதிக அளவில் மக்கள் வசிக்கின்ற நகரத்திற்கு தேவையை பூர்த்தி செய்யக்கூடிய நிலையில் அந்தக் காலரிகளை கட்டும் திட்டத்தை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, தற்போது இல்லை என்றுதான் என்னால் சொல்ல முடியும். எப்பொழுதும் இல்லை என்று நான் சொல்லக்கூடாது. ஆனால் மதுரை மாநகரத்தினுடைய அப்படிப்பட்ட தேவைகளைப் பார்த்து அதுபோன்ற பணிகளை நிறைவேற்றும் நிலைமை எதிர் காலத்தில் ஏற்பட வேண்டும் என்றுதான் நாங்களும் விரும்பு கிறோம்.

திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் நான் கேட்க விரும்புவது, உடனடியாக முழுமையாக அந்த வசதிகளை, அந்த காலரிகளை கட்டுகின்ற திட்டத்தை அமல் படுத்த முடியாத நிலைமை இருந்தாலும்கூட, சிறு மழை பெய்தால் கூட, உளைச் சேறு ஏற்படுகின்ற அளவுக்கு அந்த மைதானம் செம்மைப் படுத்தப்படாமல் இருக்கின்றதே. அதை செம்மைப்படுத்தக்கூடிய அளவுக்கு மேம்பாடு செய்யும் வகையில், செம்மை மேம்பாட்டு திட்டத்தை அரசு எடுத்துக் கொள்ளுமா? அதற்குத் தேவை யான உத்தரவுகளை இடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, திடலை செம்மையாக வைத்திருக்க வேண்டும் என்றும் அதற்கான திட்டத்தை குறிப்பிட்ட அந்த மாவட்ட விளையாட்டு மன்றம் எடுத்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.